
بسم الله الرحمن الرحيم



# Friday Sermon

HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH

MUNIR AHMAD AZIM

27 July 2018
(13 Dhul Qaddah 1439 AH)

## “FORGIVENESS”/“மன்னித்தல்”

**(Tamil version - தமிழ் பதிப்பு)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும்இ தஅவசும்இ அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

உங்களில் பெரும்பான்மையான முஸ்லீம்களும் தங்களுடைய சகோதர சகோதரிகளிடம் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதில்லை. எத்தனையெத்தனை ஆண் பிள்ளைகளின் மனைவிகள், தங்களது கணவரின் தாயாரிடம் பேசாமலிருக்கின்றனர். இதைவிட மோசமான செயலை பாருங்கள், எத்தனையெத்தனை பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளிடத்தில் கூட பேசாமலிருக்கின்றனர். துரஷ்டவசமாக இந்த பட்டியல் மிகவும் நீண்டதாகும்.

ஒரு காரியம் இத்தருணத்தில் கூறாமலிருக்க முடியாது. அதாவது ஒரு உண்மையான நம்பிக்கையாளரைப் பொறுத்த வரையில் அவர் அல்லாஹ்வின் மன்னிப்பை எதிர்பார்க்கிறார். ஆனால் நாம் ஒரு காரியத்தை விட்டுவிடுகிறோம், அதாவது நமக்கு அநீதி இழைத்தவர்களை நாம் மன்னிக்காமல் இருக்கிறோம், என்பதை நாம் மறந்துவிடுகிறோம். ஒருவேளை அது நம் அறியாமையினாலும் அல்லது நான் என்னும் அகங்காரத்தினாலும் ஆகலாம். அல்லாஹ் தான் நாடியவர்களை மன்னிப்பவனாக இருக்கின்றான் என்பதை நீங்கள் உணர்ந்து விடுவீர்களேயானால் அது உங்களுக்கு மிகவும் நல்லதாக அமையும்.

**“அவன் விரும்புபவனை மன்னித்து விடுகின்றான். அவன் விரும்புபவனுக்கு தண்டனை வழங்குகின்றான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் அருள் செய்பவனுமாவான்” (3 – 130)**

ஒரு கேள்வியை நமக்கு நம்மிடமே கேட்கலாம். அதாவது ஏன் நான் மன்னிக்க வேண்டும்? பல்வகையான குறைபாடுகள் நமக்கு இருந்த போதிலும் எல்லா வகையான தவறுகள் மற்றும் கெட்டப் பழக்கங்கள் நமக்கு இருந்தபோதிலும் அல்லாஹ் நம்மை மன்னித்துக் கொள்பவனாகயிருகின்றான் என்றால், நம் அம்மா, நம் தந்தை, நம் சொந்த சகோதரர் அல்லது சகோதரி நம் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்குட்பட்ட வழியிலான நம் பிள்ளைகள் போன்றவர்களை ஏன் நாம் மன்னிக்காமல் இருக்கிறோம்?

மன்னித்தல் என்பது இறைதூதர்களின் ஒரு பண்பாகும். ஆனால் நாங்கள் இறைதூதர்களல்ல என உங்களுக்கு என்னிடம் கூறலாம். அதற்கு பதில் இறைத்தூதர்கள் அல்லாஹ்வின் மிக சிறந்தப் படைப்பினமாகத் திகழ்வதால் நிச்சயமாக அவர்களை நாம் மாதிரியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். இறைதூதர்களின் வாழ்க்கையைப் பற்றி நாம் ஆராய்ந்து கொள்வோமேயானால், மக்களை மன்னித்துகொண்டதன் மூலமாகவேதான் அவர்கள் மக்கள் இதயங்களை வென்றனர் என்பதை நமக்கு உணர முடிந்துவிடும். இதுவே அல்லாஹ்வின் ஒரு நல்ல அடியாரின் தனித்திறம். திருக்குர்-ஆன் மூலம் அல்லாஹ் நம்மிடம் கூறுகிறான். முத்தக்கின்களிலிருந்து (இறையச்சமுடையவர்கள்) எவர் சொர்க்கத்தில் நுழைகிறார் என்றால், அவர் தங்களது சகோதரர்களை மன்னித்தவராகயிருப்பார். நாம் உண்மையிலேயே

இத்தகைய ஒரு நபராக மாறிவிட விரும்புகிறோமேயானால் நாம் நம் சகோதரர் மற்றும் சகோதரிகளை மன்னிக்கும் பண்பினை நம்மிடம் வளர்க்க வேண்டும். முத்தக்கியைக் குறித்து அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்.

**“அவர் தங்களது கோபத்தை அடக்கிக் கொள்பவர்கள் மனிதர்களை மன்னிப்பவராக இருப்பார்கள்”** (3 : 135)

ஒருவரை முத்தக்கியாக மாற்றிவிடும் தனிமம் என்பது முதலாவதாக தனது கோபத்தை அடக்கிக் கொள்ளும் அன்னாரின் திறனாகும். அவருக்கு வலிமை மற்றும் தைரியம் இருந்த போதிலும் அவருக்கு தீங்கிழைப்போர்களை மன்னித்து விடுகிறார் என்பது முத்தக்கியின் இன்னொரு திறனாகும். மன்னிப்பு வழங்குவதன் மூலம் நாம் ஒருபோதும் அழிவுக்கு ஆளாகமாட்டோம். எவர் ஒருவர் தனது சகோதரரை மன்னிக்கின்றாரோ அவர் எதனையும் இழக்கமாட்டார் என்று மட்டுமல்ல அல்லாஹ் அவரை மேன்படுத்திக் கொள்ளவும் செய்கின்றான்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“அல்லாஹ்விடம் பொருந்தியவாறு மன்னிப்பவர் எவரையும் அல்லாஹ் மேன்மைப்படுத்துவான்”. (முஸ்லீம்)**

பிறரை மன்னிப்பதன் மூலமாக, அவர் இறை மன்னிப்பு மற்றும் மக்களின் மன்னிப்பினை பெறுகிறார். **“பிறர் நம்மிடம் செயல்பட நாம் விரும்பும் அதே விதத்தில் நாம் பிறரிடம் நடந்துக் கொள்ளும்படி”** இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நமக்கு கட்டளை விடுக்கிறார். **ஒரு வார்த்தையால் அல்லது ஒரு செயலினால் நாம் எவரையேனும் காயப்படுத்திக் கொண்டால், அவர் நம்மை மன்னிப்பதை நாம் விரும்புபவராக இல்லையா?** எனவே நாம் பிறரை மன்னிப்போம் . அந்நேரம் அவர்களும் நம்மை மன்னித்து விடுவார்கள்.

இறை தூதர் (ஸல்) அவர்கள் மேலும் நமக்கு கற்பிக்கிறார்.

**“நம்முடைய சகோதரர்களை நாம் மன்னிக்கும் போது, அல்லாஹ் நம்மை மன்னித்து விடுகிறான். பிறரை மன்னிப்பவர்களை அல்லாஹ் மன்னிக்கிறான். எனவே இறைவனிடமிருந்து மன்னிப்பை பெறுவதற்கான ஒரு வழி, பிறரை மன்னிக்கும் பண்பினை நாம் நம்மிடம் வளர்க்க வேண்டும்**

**என்பதாகும்".** பிறரை மன்னிப்பதன் மூலம் இறை கோபத்திற்கு ஆளாகாமலிருக்க நமக்கு முடியும். பிறரை நாம் மன்னிக்காமலிருந்தால், நாமே நமது இரட்சிப்பின் கதவினை அடைத்து விடுகிறோம். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் **"பிற மக்களுடன் நீங்கள் இரக்கத்துடன் இருங்கள். அந்நிலையில் நீங்களும் இரக்கத்தை பெறுவீர்கள். பிறரை நாம் மன்னித்து விடுவேமேயானால், இறைவனும் நம்மை மன்னித்து விடுகிறான்".** (அஹமது)

## How many times can we forgive?

### எத்தனை முறை நமக்கு மன்னிக்கலாம்?

**"ஒரு நம்பிக்கையாளர் தனது சகோதரரை மிகுதியாக மன்னிக்க விரும்புபவராக இருப்பார்"** என்று கதீஸீகளிலிருந்து நமக்கு உணர முடிகிறது. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கிறார்.

**ஒருவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களை சந்திக்க வந்தார். பின்னர் அவர் இறைத் தூதரிடம் வினவினார்.**

**இறைத் தூதரே! என் வேலைக்காரனை எத்தனை முறை நான் மன்னிக்க வேண்டும்? இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மௌனமாகயிருந்தார். அந்நிலையில் அவர் அதே கேள்வியினை மேலும் கேட்டார். அந்நேரமும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பதிலளிக்காமல் மௌனமாகயிருந்தார். ஆனால் அவர் மூன்றாவது முறையாகவும் அக்கேள்வியை மேலும் கேட்டார்.**

இறை தூதர் பதிலளித்தார். **"ஒவ்வொரு நாளும் 70 முறை நீ மன்னிக்க வேண்டும்".**

இப்பேருரை, உங்களை விவேகமுடையவர்களாகவும், கர்வமில்லாதவர்களாகவும், எல்லோரிடத்திலும் அன்பாக நடந்துக் கொள்பவர்களாகவும் மாற்றி விடட்டும். அது உங்கள் உடலிலும் ஆன்மாவிலும் ஒளிர வேண்டும். புறக்கணிப்பு மற்றும் உங்களின் பிற தீமைகளை (எனது தோழர்களிடமும் மற்று முஸ்லீம்களிடமும்) நெருப்புக்கு இரையாக்கி விடுங்கள். உலர்ந்த இலைகளை நெருப்பு எரித்து சாம்பலாக்கி விடுவதைப் போன்று!

இத்தகையிலான ஒரு சீர்திருத்தம் உங்களில் உருவாகட்டும். இன்ஷா அல்லாஹ்! அந்நேரம் நீங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளும் ஒரு நேர்மையான நம்பிக்கையாளரைப் போன்று மாறி விடுவீர்கள். ஒவ்வொரு மனிதனும் தனது சக மனிதர்களை மன்னித்து விட்டால், உலகம் அமைதியான ஆட்சியின் கீழ் வந்தடையும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். போர்கள் மற்றும் கொலைகள் இல்லாத ஒரு உலகம். அந்நேரம் நம் வீடு, நம் குடும்பம், நம் நாடு, நம் சமுதாயம் மற்றும் நம் உலகம் அமைதியை பெற்றுவிடும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் மன்னிக்க கற்றுக் கொள்ளவேண்டியது அவசியம். இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் நம் இதயம் மற்றும் மனங்களை மன்னிப்பதற்காக திறந்து தருவானாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன் சும்ம ஆமீன்.


**Translated by**

*Azim Ahmad*

Email: azimahmad070@gmail.com

Ph: 7339689239


**ISSUED BY:**


**R. JAMALUDDIN RAOTHER**

Amir Kerala South Zone, India

Jamaat Ul Sahih Al Islam

Email: jamal.raother@gmail.com

Phone: 9447001832, 04752252663

Blog: www.sahih-al-islam.blogspot.in